## மார்ச்1 கழகத் தலைவர் – முதல்வர் பிறந்த நாள் விழா!

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் மரம் நடுதல், ரத்த தானம். கழகக் கொடி ஏற்றி - நல உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

புதுக்கோட்டை, பிப். 28–

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் முழுவதும் மார்ச் 1 கழகத் தலைவர், முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள், மரம் நடுதல், ரத்த தானம் செய்தல் கழகக் கொடி ஏற்றுதல் என பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் எழுச்சியாக கொண்டாடுவோம் என புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், இயற்கை வழங்கல் துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டு மக்களின் இதயங்களை தன்பால் தன்வயப்படுத்தி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ஓயாது உழைக்கும் ஒப்பற்ற தலைவருக்கு பிறந்த நாள் விழா. இளமைக்காலம் முதல் இரு வண்ணக் கொடி ஏந்தி, இயக்கம் காத்து தொண்டராய் உழைத்து உழைத்து மாபெரும் இயக்கத்தின் மகத்தான தலைவராக உயர்ந்திட்ட உத்தமருக்கு பிறந்த நாள் விழா, இந்தியாவில் உள்ள மாநில முதல்வர்களி லேயே சிறந்த முதல்வர் என பெயர் பெற்றிருந்தாலும், இந்தியாவின் சிறந்த மாநிலம் தமிழ்நாடு தான் என பெயர் பெறுவதுதான்



நமக்கு பெருமை என சூளுரைத்து ஓயாமல் உழைத்துவரும் உன்னத தலைவர், உழைப்பால், தியாகத்தால், தொண்டால், அன்பால், நிர்வாகத் திறமையால், இமயம் என புகழ் பெற்றிருந்த போதும் நம்மை உருவாக்கிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் தடம் பற்றி தொண்டரோடு தொண்டராக களத்தில் நின்று இருவண்ணக் கொடி ஏந்தி களமாடி வருகிற வரலாற்று தலைவனாம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஏழை எளியோர் பயன்பெறும் வகையில் நல உதவிகள் வழங்குதல், கண் தானம், ரத்த தானம் செய்தல், மார்ச் 1 அன்று பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல், மாணவர்களுக்கு தேவையான உபகரணங்கள் வழங்குதல், மரம் நடுதல் , கழகக் கொடி ஏற்றுதல் மற்றும் கவியரங்கம், கருத்தரங்கம், வாழ்த்தரங்கம் நடத்துதல் என புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் சிறப்பாகவும், எழுச்சியாகவும் கொண்டாடிடுவோம்.

இதற்கான ஏற்பாடுகளை மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு , பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் சிறப்பாக செய்திட வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஒடுகத்தூர் ஆர். நடராசன்

**பிப்ரவரி 28 (2009)**



கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்து கிளை, பேரூர், ஒன்றியம் ஆகிய அமைப்புகளின் செயலாளராகப் பொறுப்பேற்று கழகப் பணியாற்றிய இவர். பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திருமணம் செய்து கொண்டார்.

மூன்று முறை பொதுக்குழு உறுப்பினராகவும், ஒரு முறை மாவட்ட அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

ஒடுகத்தூர் பேரூராட்சித் தலைவராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று 14 முறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## கழகத் தலைவர்- – முதல்வர் பிறந்த நாளையொட்டி –

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் முழுவதும் நல உதவிகள் வழங்கிக் கொண்டாடுவோம்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!

புதுக்கோட்டை. பிப். 28–

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் முழுவதும் மார்ச் 1 கழகத் தலைவர், முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள், மரம் நடுதல், ரத்த தானம் செய்தல், கழக கொடி ஏற்றுதல் என பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் எழுச்சியாக கொண்டாடுவோம் என புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

தமிழ்நாட்டு மக்களின் இதயங்களை தன்பால் தன்வயப்படுத்தி தமிழகத்தின் வளர்ச்சிக்கு ஓயாது உழைக்கும் ஒப்பற்ற தலைவருக்கு பிறந்த நாள் விழா. இளமைக்காலம் முதல் இரு வண்ணக் கொடி ஏந்தி, இயக்கம் காத்து தொண்டராய் உழைத்து உழைத்து மாபெரும் இயக்கத்தின் மகத்தான தலைவராக உயர்ந்திட்ட உத்தமருக்கு பிறந்த நாள் விழா, இந்தியாவில் உள்ள மாநில முதல்வர்களிலேயே சிறந்த முதல்வர் என பெயர் பெற்றிருந்தாலும், இந்தியாவின் சிறந்த மாநிலம் தமிழ்நாடு தான் என பெயர் பெறுவதுதான் நமக்கு பெருமை என சூளுரைத்து ஓயாமல் உழைத்துவரும் உன்னத தலைவர், உழைப்பால், தியாகத்தால், தொண்டால், அன்பால், நிர்வாகத் திறமையால், இமயம் என புகழ் பெற்றிருந்த போதும் நம்மை உருவாக்கிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் தடம் பற்றி தொண்டரோடு தொண்டராக களத்தில் நின்று இருவண்ணக் கொடி ஏந்தி களமாடி வருகிற வரலாற்று தலைவனாம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஏழை எளியோர் பயன்பெறும் வகையில் நல உதவிகள் வழங்குதல் ,

கண் தானம், ரத்த தானம் செய்தல் மார்ச் 1 அன்று பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல், நோயாளி



களுக்கு ரொட்டி பழங்கள் வழங்குதல் மாணவர்களுக்கு தேவையான உபகரணங்கள் வழங்குதல், கழக கொடி ஏற்றுதல் மற்றும் கவியரங்கம் கருத்தரங்கம், வாழ்த்தரங்கம் நடத்துதல் என புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் சிறப்பாகவும், எழுச்சியாகவும் கொண்டாடிடுவோம். இதற்கான ஏற்பாடுகளை மாநில , மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் சிறப்பாக செய்திட வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஒழுங்கு நடவடிக்கை!

### தலைமைக் கழக அறிவிப்பு!

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், அஞ்செட்டி ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ம.பெரியநாயகம் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.


"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 600 018
நாள்- 26.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ப. பழனிவேல்

**பிப்ரவரி 28 (2022)**



தனது இளமைப் பருவத்திலேயே கழக உறுப்பினராகி பணியாற்றி வந்தவர்.

ஒன்றுபட்ட நாகை மாவட்ட விவசாய அணி அமைப்பாளராகப் பொறுப்பு வகித்தவர்.

மூன்று முறை வடலூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும், இரண்டுமுறை ஒன்றியக்குழு உறுப்பினராகவும், நாகை மாவட்ட ஒன்றியப் பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


# நான்காம் ஆண்டு
# நினைவு அஞ்சலி

வடவூர். **ப.பழனிவேல்** அவர்கள்
நாகை முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர்

— நினைவு நாள் : 28.02.2026 —

தோற்றம் : 02.09.1940 | மறைவு : 28.02.2022

நீங்கள் காட்டிய கலைஞரின் பாதையில்
கழகத்தலைவரின் வழியில்
சின்னவர் அவர்தம் கரம்பற்றி
தொடர்ந்து பயணிப்போம் !

*என்றும் உங்கள் நினைவில்*

**வடவூர். க.ராஜேந்திரன்**
ஒன்றிய கழக செயலாளர்
தலைமை செயற்குழு உறுப்பினர்,



DHARUN Digital

# நாகை தெற்கு ஒன்றிய தி.மு.க